கழகத் தலைவர் – முதலமைச்சர் அறிவுறுத்தல்படி சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் சட்டமன்ற தொகுதி, 60வது வட்டம் மற்றும் 56வது வட்டத்தில் பெருமழையால் பாதிக்கப்பட்ட தெருக்களுக்கு சென்று ஆய்வு செய்து, 4வது கடற்கரை சாலை மற்றும் சண்முகராயன் தெருவில் உள்ள 2000 மக்களுக்கு பால், பிஸ்கட், ரஸ்க், பிரட் ஆகிய பொருட்களை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்.உடன் பகுதிக் கழக செயலாளர்கள்: எஸ். ராஜசேகர், எஸ்.முரளி, மண்டல குழு தலைவர் பி.ஸ்ரீராமுலு மாமன்ற உறுப்பினர்கள்: இசட் ஆசாத், வெ.பரிமளம். வட்டக்கழகச் செயலாளர்கள்: கே. கவியரசு, ராஜா என்ற கதிரவன் மற்றும் கழக முன்னணியினர் செயல் வீரர்கள் கலந்து கொண்டனர்.

செங்கல்பட்டு மாவட்டம், பொழிச்சலூர் கவுல் பஜார் பகுதியில் உள்ள உபரி நீரை அடையாறு ஆற்றில் வெளியேற்ற ரூ.5.20 கோடி மதிப்பீட்டில் கி.மீ. 0/6 1535ல் மழை நீர் வடிகால்வாய் மற்றும் கி.மீ. 0/6 & 1/535ல் சிறு பாலம் அமைத்தல் என நிரந்தர வெள்ள மீட்பு பணிகளை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ், மண்டலக்குழுத் தலைவர் வே.கருணாநிதி, ஒன்றிய செயலாளர் ஜி.கே. ரவி, ஊராட்சி மன்ற தலைவர் இளங்கோவன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் மனோகரன், நெடுஞ்சாலைத் துறை அலுவலர்கள், மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தலைமை! அமைச்சர் சு.முத்துசாமி முன்னிலை! கோவை – சரவணம்பட்டி மாமன்ற உறுப்பினர்

எஸ்.பூங்கொடி - சோமசுந்தரம் இல்லத் திருமண வரவேற்பு விழா!

கனிமொழி கருணாநிதி எம்.பி. - ஆ.இராசா எம்.பி. - திருச்சி சிவா எம்.பி. வாழ்த்துரை!

மு.கண்ணப்பன் – நா.பழனிச்சாமி – நா.கார்த்திக் – தொ.அ.ரவி – தளபதி முருகேசன் பங்கேற்பு!

கோவை, அக்.18-

கோவை மாவட்டம், குரும்பபாளையம், நரையான் தோட்டம் எஸ். வேலுச்சாமி - வி.ராஜேஸ்வரி ஆகியோரின் புதல்வர் வி. ஜெய்குமாருக்கும், கோவை மாவட்டம், சரவணம்பட்டி, தெற்காலக்காடு பி.சோமசுந்தரம் - 21வது வார்டு மாமன்ற உறுப்பினர் எஸ்.பூங்கொடி - சோமசுந்தரம் ஆகியோரின் புதல்வி எஸ்.பத்மபிரியாவுக்கும் மணவிழா வரவேற்பு 21.10.2024 - திங்கள்கிழமை மாலை 5 மணியளவில் கோவை, சத்திசாலை, குரும்பபாளையத்தில் அமைந்துள்ள குறிஞ்சி மஹாலில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பிற்கு அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தலைமை வகிக்கிறார்.

அமைச்சர் சு.முத்துசாமி, முன்னாள் அமைச்சர்கள் மு.கண்ணப்பன், பொங்கலூர் நா.பழனிச்சாமி, மாவட்டக் கழகச் செயலாளர்கள் தொ.அ.ரவி, நா.கார்த்திக், தளபதி முருகேசன், பகுதிச் செயலாளர் சிரவை சிவா (எ) பழனிசாமி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மணவிழா வரவேற்பில் கனிமொழி கருணாநிதி எம்.பி., ஆ.இராசா எம்.பி., திருச்சி சிவா எம்.பி., அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், அர.சக்கரபாணி, அரசு தலைமை கொறடா கா. இராமச்சந்திரன், கணபதி ராஜ்குமார் எம்.பி. ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இதில் ஆர்.ரங்கநாயகி ராமச்சந்திரன், ரா.வெற்றிச்செல்வன், பி.கந்தசாமி, கே.கோமளவள்ளி, ரா. மாலதி எம்.சி., இரா.கதிர்வேலுசாமி, வேடகதிர்வேல், எஸ்.மாணிக்கம் (எ) மருதாசலம்.

எல்.ரங்கசாமி, யாஸ் மின்சேட், சி.முத்துசாமி, கவிதா, சௌந்தர் ராஜன், ரங்கசாமி, கண்ணன், சச்சிதானந்தம், வனஜா, நடராஜன், ஆனந்தன், கிழக்குத்தி முத்து, கருணாநிதி, பத்மநாபன், தங்கவேலு, கிருஷ்ணவேணி, கருப்பண்ணன், விஜியகுமார், செந்தில், சுப்பிரமணியம், பாலசுப்பிரமணி, மதியழகன், முரளி, தர்மராஜ், பொன் ராணி, வெற்றிவேல், தனசேகர், வின்சென்ட், தர்மலிங்கம், ஆனந்தசேகர், தனபால் டேனியல், சிங்காரவேலு, சுதர்சன், பானுப்பிரியா, செழியன், ஐயப்பன், சாத்தப்பன், மாலதி, மாரியப்பன், சாமிகண்ணு, நாகரத்தினம், செந்தில்குமார் உள்ளிட்ட பலர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

பி.சோமசுந்தரம் நன்றி கூறுகிறார்.

தென்காசி வடக்கு மாவட்டக் கழக மருத்துவரணி சார்பில்

வாசுதேவநல்லூரில் இலவச மருத்துவ முகாம்!

மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில்!

தென்காசி, அக்.18 -

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. மருத்துவரணி சார்பில் தென்காசி வடக்கு மாவட்டம் வாசுதேவநல்லூர் பெருந்தலைவர் காமராஜர் திருமண மண்டபத்தில் இன்று (18.10.2024 - வெள்ளிக்கிழமை) காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை மாபெரும் இலவச மருத்துவ முகாம் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறுகிறது.

தமிழக மக்கள் முழு சுகாதாரத்துடன் வாழ வேண்டும் என்பதற்காக கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்கள் பல்வேறு மருத்துவ முகாம்களை நடத்திட ஆணை பிறப்பித்துள்ளதை கருத்தில் கொண்டும், கழக இளைஞர் அணி செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி தென்காசி வடக்கு மாவட்டம் வாசுதேவநல்லூரில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் திருமண மண்டபத்தில் மாபெரும் இலவச மருத்துவ முகாம் இன்று (18ஆம் தேதி) காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை நடைபெறுகிறது.

தென்காசி வடக்கு மாவட்ட மருத்துவ அணி சார்பில் நடைபெறும் மாபெரும் மருத்துவ முகாம் நிகழ்வு தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் தென்காசி மக்களவை உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், முன்னாள் எம்.பி. தனுஷ், எம்.குமார், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சதன் திருமலை குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

வாசுதேவநல்லூர் பேரூர்ச் செயலாளர் ரூபி பாலசுப்பிரமணியம் வரவேற்புரையாற்றுகிறார்.

முகாமை தலைமைச் செயற்குழு உறுப்பினர் யு.எஸ்.டி.சீனிவாசன், மாநில மருத்துவரணி துணைச் செயலாளர் செ.சு.செண்பகவிநாயகம், தென்காசி வடக்கு மாவட்ட மருத்துவ அணி தலைவர் வி.சுமதி, மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் அ.மணிகண்டன் ஆகியோர் துவக்கி வைக்கின்றனர்.

முகாமில் மருத்துவர்கள் ராதா, மணிகண்டன், செல்வமாரி, ஜெயக்கண்ணன், செண்பகவிநாயகம், சுமதி ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர். குறிப்பாக இந்த முகாமில் கல்லீரல் சுருக்கம், கல்லீரல் வீக்கம், கல்லீரல் கொழுப்பு இவைகளை கண்டறியும் பைபுரோ ஸ்கேன் முற்றிலும் இலவசமாக செய்யப்படுகிறது.

நிகழ்வில் வாசுதேவநல்லூர் வடக்கு ஒன்றியச் செயலாளரும், ஒன்றியக் குழுத் தலைவருமான பொன்.முத்தையா பாண்டியன், தெற்கு ஒன்றியச் செயலாளர் பூசைபாண்டியன், மாவட்டப் பொருளாளர் இல.சரவணன், துணைச் செயலாளர் மனோகரன், வாசு பேரூராட்சி மன்றத் தலைவர் சுமங்கலி, லாவண்யா ராமேஸ்வரன், துணைத் தலைவர் லைலா பானு சேக்மதார் உள்பட உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தினர் கலந்து கொள்கின்றனர்.

பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன் பங்கேற்பு

சோழிங்கநல்லூர் 189 - 190 வார்டுகளில் உணவு - அத்தியாவசியப் பொருட்கள்!

ச.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, அக். 18 -

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதி சென்னை மாநகராட்சி மண்டலம் 14ல் உள்ளடங்கிய வார்டு எண்கள் 189 மற்றும் 190 பள்ளிக்கரணை பகுதியில் வடகிழக்கு பருவமழையால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்களை சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ் வழங்கினார்.

இந்நிகழ்வில் மண்டலம் சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி செயலாளரும் 14 வது மண்டல குழுத் தலைவருமான பெருங்குடி எஸ்.வி. ரவிச்சந்திரன், மண்டல கண்காணிப்பு அலுவலர் மகேஷ் வரி ரவிக்குமார், மாமன்ற உறுப்பினர்கள் வ.பாபு, சிவபிரகாஷ், மண்டலம் 14 உதவி ஆணையர் உள்ளிட்ட மாநகராட்சி அலுவலர்கள், வட்டக் கழகச் செயலாளர் எஃப்.ஆரோன் (எ) அரசு, பகுதிக் கழக துணைச் செயலாளர் வி.வி..குமரேசன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில்

பூத் கமிட்டி அமைத்தல் - வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் கலந்தாலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் பூத் கமிட்டி அமைத்தல் வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் மாநகர - நகர - ஒன்றிய - பகுதி - பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் கீழ்க்கண்ட விவரப்படி நடைபெற உள்ளது.

நாள் / நேரம்	தலைமைக் கழக பார்வையாளர்கள்	சட்டமன்ற தொகுதி	இடம்
22.10.2024 காலை 11 மணி	எம்.டி.ஆர்.சாரதி மணிமாறன்	மதுராந்தகம்	ஓட்டல் ஐவே ஜி.எஸ்.டி. சாலை மதுராந்தகம்
22.10.2024 பிற்பகல் 1 மணி	எஸ்.டி.இசை	செய்யூர்	அரேபியன் ஓட்டல் கல்பாக்கம்
23.10.2024 பிற்பகல் 2 மணி	சூர்யா வெற்றிக்கொண்டான்	உத்திரமேரூர்	உமாசேகர் திருமண மண்டபம் வாலாஜாபாத்
23.10.2024 மாலை 4 மணி	ப.அருண்குமார்	காஞ்சிபுரம்	கலைஞர் பவள விழா மாளிகை காஞ்சிபுரம்

எனவே, இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர - நகர - ஒன்றிய- பகுதி பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் மட்டும் கலந்துகொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

க.சுந்தர் எம்.எல்.ஏ.
செயலாளர்
காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம், கொளத்தூர் மழை நீர் செல்லும் ஐ.சி.எப்.கால்வாய் ரயில்வே துறையினரால் அடைக்கப்பட்டு இருந்த பகுதியில் அடைப்பு நீக்கப்பட்ட கால்வாய் பணியினை சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பார்வையிட்டார். உடன் மண்டலக் குழுத் தலைவர் கூ.பீ.ஜெயின், மாமன்ற உறுப்பினர் சுதாதீனன், வட்டக் கழகச் செயலாளர் மா.அகிலன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வானவில் விஜய், சாவித்ரி வீரராகவன், ஜி.ஜெ.பிரபு, வி.து.ராமமூர்த்தி, ஐ.சி.எப்.சுரேஷ்பாபு மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி, 19 ஊராட்சி 5837 உறுப்பினர்கள் கொண்ட கடலூர் மாவட்டம் – திட்டக்குடி கம்மாபுரம் ஒன்றியம் முதனை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் வங்கியில் தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் ஆய்வு செய்து விவசாய சங்க உறுப்பினர்களுக்கு விவசாய பயிர் கடன் விரைந்து வழங்கவேண்டும் மென உத்தரவுவிட்டார். உடன் ஒன்றியச் செயலாளர்கள் செங்குட்டுவன், வேல்முருகன், சுரேஷ், ஆசைத்தம்பி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் – திருமதி காஞ்சனா ஆகியோரின் இளைய மகன் மா.சு.அன்பழகன் 4ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு நேற்று (17-10-2024) நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினர். உடன் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த்ரமேஷ், மாவட்ட கழக நிர்வாகிகள் எஸ்.குணசேகரன், மாவட்ட துணைச் செயலாளர் பாலவாக்கம் மு.மனோகரன், மாவட்ட பொருளாளர் வேளச்சேரி எஸ்.பாஸ்கரன், பகுதி கழக செயலாளர்கள் இரா. துரைராஜ், எம்.கிருஷ்ணமூர்த்தி, கே.கண்ணன், எஸ்.வி.ரவிச்சந்திரன், வி.இ.மதியழகன், வட்ட கழக செயலாளர்கள் எம்.நாகா, நேருநகர் எஸ்.பாட்சா, தா.மோகன்குமார் உள்ளிட்டோர் உள்ளனர்.